# அவர் ஒரு
# சகாப்தம்



கணினிக் கம்பன்

**ஜெ. வீரநாதன்**

*M.A.,PGDJMC.,M.Phil.,M.A.,*

ESSENTIAL
Estd. PUBLICATIONS 1975

**எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ்**

167, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ்
இராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641 045, இந்தியா
தொலைபேசி : 0422-2323228, செல்பேசி : 98422-13782
மின்னஞ்சல் : essential.publications@yahoo.com
வலைதளம் : www.veeranathan.com

**நூல் விவரப் பட்டியல்**

**ISBN : 978-93-80324-59-3**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **அவர் ஒரு சகாப்தம்**<br>**Avar Oru Sahaptham** |
| ஆசிரியர் | : | **ஜெ. வீரநாதன்** |
| நூல்வகை | : | வாழ்க்கை வரலாறு |
| உரிமை © | : | ஆசிரியருக்கே |
| முதல் பதிப்பு | : | ***21.03.2015*** |
| தாள் | : | 70 ஜிஎஸ்எம் காப்பியர் பேப்பர் |
| அச்செழுத்து | : | 12 புள்ளிகள் |
| பைண்டிங் | : | சாதாரணக் கட்டு |
| பக்கங்கள் | : | 260 + 08 = 268 பக்கங்கள் |
| விலை | : | **ரூ. 290** |
| வடிவமைப்பு, ஒளியச்சு,<br>அச்சிட்டோர் | : | **சித்ராலயா,** கோயம்புத்தூர் - 641 045 |
| வெளியீடு | : | **எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ்**<br>167ஏ, போலீஸ் கந்தசாமி வீதி<br>கோயம்புத்தூர் - 641 045<br>0422-2323228, 98422-13782 |
| மின்னஞ்சல் | : | essential.publications@yahoo.com |


**Copyright warning :** No part of this publication may be reproduced or transmitted in a retrieval system in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or otherwise, without the prior written permission of Essential Publications, Coimbatore.

The information in this book is furnished for informational use only, is subject to change without notice, and shoud not be constructed as a commitment by the Author and/or Publisher of this book. (The matter in this book is for educational purposes only. It is not valid for any legal claim.) The publisher assumes no responsibility for any errors or inaccuracies that may appear in this book. Products names mentioned in this book are used for identification purposes only and may be trademarks of their respective companies. All Legal case pertaining to this book is subject to the Jurisdiction of the Coimbatore Courts only.

தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமே இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. மேலும் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி மாறுதலுக்குட்பட்டவை மட்டுமல்லாது, இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்துவதால் எதிர்பாராமல் ஏற்படும் தவறுகளுக்கும் இழப்புகளுக்கும், சேதத்திற்கும் இந்த நூலின் ஆசிரியரும் பதிப்பகத்தாரும் எந்த வகையிலும் பொறுப்பு ஏற்க முடியாது என்ற வகையிலும் இந்த நூல் வெளியிடப்படுகிறது. இந்தப் புத்தகத்தில் பயன்படுத்தியுள்ள பொருட்களின் / தயாரிப்புகளின் பெயர், குறியீடுகள் போன்றவை அந்தந்த நிறுவனங்களின் வர்த்தகப் பதிப்புரிமை பெற்றவையாகும். கோயம்புத்தூர் சட்ட எல்லைக்கு உட்பட்டது.



அவர் வணங்கி மகிழ்ந்த அவரது அன்புத் தெய்வம்

## அருள்மிகு மதுரை வீரன் சுவாமி

இந்த நூலை அன்புக் காணிக்கையாக
ஏற்றருள வேண்டுகிறோம்.


உலகப் புத்தக தினம் - ஏப்ரல், 23
World Book Day - April, 23
கற்றனைத்து ஊறும் அறிவு

# முன்னுரை

புத்தர், இராஜராஜ சோழன், மகாவீரர், சத்ரபதி சிவாஜி, வ.உ.சிதம்பரனார், காந்தி, காமராஜர் - என்று ஏராளமான நன்மக்கள் பிறந்து, வாழ்ந்து, மறைந்து விட்டனர். அவர்களது செயல்பாடுகள், வாழ்ந்த வாழ்க்கை உள்ளிட்ட பலவற்றை இன்று நாம் புத்தகங்களின் வாயிலாக படிக்கின்றோம். அந்த மாமனிதர்கள் வாழ்ந்த இடங்களை நேரில் சென்று பார்த்து மகிழுகின்றோம். அவர்கள் பயன்படுத்திய பொருட்களைப் பார்த்து வியப்படைகின்றோம்.

ஞானி, பேரரசர், சக்கரவர்த்தி, சுதந்திர போராட்ட வீரர்கள், தலைவர்கள் - என்று அறிஞர்களால் குறிப்பிடப்படும் இவர்களைப் போன்றவர்களை நாம் எல்லோரும் அறிவோம்.

ஆனால் இந்த நாட்டில், ஏராளமான நன்மக்கள், இவர்களுக்கு இணையாக, இவர்களுக்கு எந்த வகையிலும் குறைவிலாத வாழ்க்கையை வாழ்ந்து சென்றுள்ளனர். அவர்களை நாம் யாரும் அறியோம். அல்லது யாரும் நமக்கு அவர்களைப் பற்றித் தெரிவிப்பது இல்லை.

திருச்சிராப்பள்ளி நகரில் பரமசிவம் - நாகசவுந்தரம் இணையருக்கு மகனாகப் பிறந்து, இன்டர் மீடியட் வகுப்பு வரையிலும் படித்து, பல கலைகளிலும் சிறந்து விளங்கி, சவுந்தரவல்லி என்பாரைத் திருமணம் செய்து, ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்து, அவர்களை நல்ல முறையில் வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கி, தனது 89வது வயதில் தனது பயணத்தை முடித்துக் கொண்டு இந்த உலக வாழ்விலிருந்து புறப்பட்டுச் சென்ற **அமரர் தி.ப. ஜெகதீசன்** என்பாரை நாங்கள் நன்கு அறிவோம். ஏனெனில் நாங்கள் அவரது பிள்ளைகளே.

கடமைக்காகவும், காரியத்திற்காகவும் கதர் ஆடை உடுத்தும் எத்தனையோ நபர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால் இரண்டொரு நாட்களுக்கு மட்டும் கடமைக்காக அணியுங்கள் என்று ஆணை வந்தபோது, ஒப்புக்காக அதனை ஏற்காமல், எந்தவித விளம்பரமும் இல்லாமல், யாரொருவரின் வற்புறுத்தலின் பேரிலல்லாமல், தனது முழுமனதுடனான

விருப்பத்துடன் அந்தக் கதராடைகளை ஏற்றுத் தனது வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தி, வாழ்ந்து மறைந்தவர் அவர்.

அவரது வாழ்க்கையை முழுவதுமாகச் சொல்ல முயலவில்லை. ஆனால் அவர் வாழ்ந்த வாழ்க்கை மற்றவர்களிலிருந்து பல வகைகளில் மாறியிருந்தது. தனக்கென ஒரு குறிக்கோளை, கொள்கையைக் கொண்டிருந்தார். ஆனால் அதனை யார்மீதும் திணிக்கவில்லை. அதே சமயம் அதனை யாரையும் தீண்டவிடவில்லை. தனது வழி தனி வழி என்று வாழ்ந்து காண்பித்துச் சென்றுள்ளார். அவற்றை இங்கு பதிவு செய்கிறோம்.

எதற்கும், எவருக்கும் தலை வணங்காதவர்; தனது பெண் பிள்ளைகளை படிக்க வைப்பதில் வெறி கொண்டிருந்தவர்; அதற்காக உறவினர்களையே ஒதுக்கி வாழ்ந்தவர்; தனது வாழ்வில் வெற்றிகளையும், தோல்விகளையும் சமமாகப் பாவித்தவர்; தனது மனைவியை உயிரினும் மேலாக நேசித்தவர்; அவரைத் தனது அன்னையாகவே கருதியவர்; பிள்ளைகள் அனைவருக்கும் கல்வி என்பதை வேண்டிய அளவிற்கு வழங்கியவர்; அதே சமயம் எந்த நிலையிலும் பிள்ளைகளை எதிர்பார்க்காமல் வாழ்ந்து காட்டியவர்; தமிழை நேசித்தவர்; இந்திய நாட்டைப் போற்றியவர்; - அவரைப்பற்றிய, அவருடன் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை நிகழ்வுகளை இங்கு பதிவு செய்கின்றோம்.

இந்த நூலில் எங்கள் தந்தையாகிய அமரர் தி.ப.ஜெகதீசன் அவர்களை 'அவர்' என்றே குறிப்பிடுகின்றோம். அவரது இரண்டாவது மகனும், ஐந்தாவது பிள்ளையுமான ஜெ. வீரநாதன் என்கிற நாங்கள் (பொதுவாக நான் என்று ஒருமையில் எங்களைக் குறிப்பிடும் வழக்கம் கிடையாது. இதுவும் அவர் கற்றுக் கொடுத்ததுதான்) இந்த நூலைத் தொகுத்து எழுதியுள்ளோம்.

அவரைப்பற்றிய பொதுவான செய்திகளுடன், எங்கள் தாயார், ஏழு பிள்ளைகள், மூன்று மருமகன்கள் மற்றும்

ஆறு பேரப்பிள்ளைகளும் அவருடன் வாழ்ந்த தங்களது வாழ்க்கையை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த நூலை எழுதுவதற்கு முதல் காரணம், அவர் சேர்த்து வைத்துள்ள ஏராளமான புகைப்படங்கள், பத்திரிகை செய்திகள், குறிப்புகள், அழைப்பிதழ்கள் போன்றவையே. அவற்றை ஒரு பதிவாக தொகுக்கவே இதனைத் துவக்கினோம்.

குறிப்பாக 1922ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள, எங்கள் பெரியதாத்தா ஒருவரின் திருமண அழைப்பிதழை பத்திரப்படுத்தி வைத்துள்ளார். இந்திய சுதந்திரத்திற்கு முன்பு வெளியான பல பத்திரிகை செய்திகள், புகைப்படங்கள் பல அவரது தொகுப்பில் உள்ளன. 1989ஆம் ஆண்டில் தினமணி நாளிதழில் 21ஆம் நூற்றாண்டில் தேவையான எழுத்துச் சீர்திருத்தம் என்பது தொடர்பாக எழுந்த விவாதத்தை முழுமையாக சேகரித்தும் வைத்துள்ளார்; அதில் கலந்து கொண்டு தனது கடுமையான எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளார். இவற்றின் மொத்தத் தொகுப்பும் அவரிடம் உள்ளது.

தன்னைப்பற்றிய விரிவான செய்திகளை பல்வேறு வகைகளில் ஆவணங்களாகப் பதிவு செய்துள்ளார். பத்திரிகைகளில் வெளியான செய்திகள், புகைப்படங்கள், சான்றிதழ்கள் என்று தன்னைப் பற்றிய பற்பல செய்திகளை விட்டுச் சென்றுள்ளார்.

வாழ்ந்த காலம் வரையிலும் விளம்பரத்திற்காகவோ, வெட்டி ஆடம்பரத்திற்காகவோ எந்த ஒரு செயலிலும் அவர் இறங்கவில்லை. தன் பிள்ளைகளின் திருமண நிகழ்வுகள் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் கதர் பைஜாமா, ஜிப்பா மட்டுமே அணிந்து வாழ்ந்துள்ளார்.

எங்களை மட்டுமல்லாது, அவர் பற்றிய செய்திகளை கேள்விப்படும் எவருமே வியப்படையும் வாழ்வை வாழ்ந்து சென்றுள்ள அவர் பற்றிய பதிவினை உங்கள் முன் வழங்குகின்றோம். அவர் தலைவராகவோ, ஞானியாகவோ, மேதையாகவோ, வழிகாட்டியாகவோ வாழவில்லை. ஆனால் அத்தனை நபர்களிடமுமிருந்த குணங்கள் அவரிடம் இருந்தது.

அவற்றை அவரது பிள்ளைகளாகிய எங்கள் ஏழு பேரிடம் மட்டுமே காண்பித்துச் சென்றுள்ளார். அவர் வாழ்ந்த காலத்தில் நாங்கள் அவற்றை அனுபவித்திருந்தாலும், அதுபற்றி யாரிடமும் பெரிதாகச் சொல்லிக் கொண்டதில்லை. எங்களுக்கு அவை வழக்கமான ஒன்றாகவே இருந்துள்ளன.

ஆனால் அவர் மறைந்த பிறகு, அவரைப்பற்றிய நினைவுகளை அசைபோடும்போதும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போதுதான் அவரது வாழ்க்கையின் பொருள் எங்களுக்குப் புலப்படலாயிற்று.

நல்ல வாழ்க்கை வாழ்ந்து சென்றவர்களின் செயல்பாடு களும், வழி முறைகளும் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ வேண்டும். அறிவுரையாக அல்லாமல், ஆலோசனையாக அமைய வேண்டும்.

இதோ எங்களுக்குத் தெரிந்த, எங்களுடன் வாழ்ந்து மறைந்த, ஒரு மனிதரைப் பற்றிய எங்களது புரிதலை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம். காரணம் எங்களுக்கு **அவர் ஒரு சகாப்தம்** என்றே வாழ்ந்து சென்றுள்ளார்.

அவர் தொகுத்து வைத்துள்ள குறிப்புகளை முழுவதுமாகப் படித்தால் ஆயிரம் பக்கங்களுக்கும் மேல் எழுதும் அளவிற்கு செய்திகள் உள்ளன. தான் படித்து மகிழ்ந்த செய்திகள் என்பது பற்றி மட்டுமே சுமார் *600* பக்கங்களுக்கும் மேல் எழுதி வைத்துள்ளார்.

காலம் அனுமதித்தால் அவற்றை மற்றொரு தொகுப்பாக உருவாக்க முடியும் என்று கருதுகின்றோம்.

நேரம் கிடைத்து, விருப்பம் இருந்தால், உங்களது கருத்துக்களை எழுதுங்கள். நன்றி.

கோவை
*13.03.2015*

**ஜெ. வீரநாதன்**
*99444-13782*
veeranathan@yahoo.com